

நீர்வளத் துறை மற்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நேற்று (19.04.2025) தலைமைச் செயலகத்தில், கல்குவாரி மற்றும் கிரஷர் நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இயற்கை வளங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க. பணீந்திர ரெட்டி, புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் .எ.சரவணவேல்ராஜ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



IDRM இந்திய ஜனநாயக மீட்பு இயக்கத்தின் சார்பில், கொளத்தூர், ஜி.கே.எம். காலனியில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்ற இளைஞர்களுக்கான கருத்தரங்கத்தில் பேராசிரியர் ஏ.கருணானந்தன், ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்களின் ஆலோசகர் டாக்டர்.பொன்ராஜ் வெள்ளைச்சாமி ஆகியோர் இன்றைய அரசியல் சிக்கல்களும் தீர்வுகளும் எனும் தலைப்பிலும் "ஒன்றிய பொருளாதார ஒதுக்கீட்டில் வஞ்சிக்கப்பட்ட தமிழ்நாடு" எனும் தலைப்பில் பேராசிரியர். வி.சிவப்பிரகாசம் ஆகியோர் உரையாற்றினர். இதில் எ.நாகராஜன், ஐ.சி.எப்.வ.முரளிதரன், சி. மகேஷ்குமார், கே. சந்துரு, சரிதா, தமிழ்செல்வன், செ.முருகன் மற்றும் கழகத்தினர், ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதக்கரம் 59வது நாள்!

## அம்பத்தூர் கிழக்குப் பகுதியில் கழகத்தினர் உணவு வழங்கினர்!

சென்னை, ஏப். 20 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 59 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (18.4.2025) அம்பத்தூர் கிழக்கு பகுதி 1) 84அ வட்டம் கங்கை அம்மன் கோயில் தெரு, Green Cinemas அருகில், சென்னை 2) 84வது வட்டம் கொரட்டூர் பேருந்துநிலையம் அருகில், கொரட்டூர், சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி., எம்.டி.ஆர். நாகராஜ், டி.எஸ்.பி.ராஜகோபால் ஆகியோர் “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதி மொழியை ஏற்று பொதுமக்களுக்கு



காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பி.கே.மூர்த்தி., டாக்டர்.ஜி சாந்தகுமாரி, எல்.பி.எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா, நீலகண்டன், ஜி.வி.நாகவள்ளி, கு. கிருஷ்ணமூர்த்தி மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு. விஜயகுமார், த.வ.லால் பி.செந்தில், வி.ரவிந்திரன், வீரராகவன், வெ.ராதா கிருஷ்ணன், த.கண்ணபிரான், எம். கமல், டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர், நா.நெப்போலி யன், ஆர்.டீக்கா, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம. அசோக்குமார், எல்.சம்பத்குமார், க. பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### ஜி.பி.செந்தில்குமரன் முன்னிலையில்

# 134 (அ) வட்டத்தில் 3 இடங்களில் தண்ணீர் பந்தல்!

## ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை எம்.சி. திறந்து வைக்கின்றனர்!

சென்னை, ஏப்.20 -

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை தென் மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை.த.வேலு எம்.எல்.ஏ, ஆலோசனையில், தியாகராய நகர் கிழக்குப் பகுதிச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, தியாகராய நகர் மேற்குப் பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. வழிகாட்டுதலில் இக் கோடை காலத்தில் பொதுமக்களின் தாகம் தீர்க்க நமது 134(அ) வட்டத்தில் கீழ்காணும் 3 இடங்களில் “தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல்” திறக்கும் நிகழ்ச்சி இன்று (20.04.2025) காலை 11 மணியளவில் பொதுக்குழு உறுப்பினர் எம்.ஆறுமுகம் மற்றும் வட்ட செயலாளர் ஜி.பி.செந்தில்குமரன் முன்னிலை யில் நடைபெறவுள்ளது.

ஈஸ்வரன் கோயில் தெரு (மேட்லி சுரங்கபாதை அருகில்) மாவட்டப் பிரதிநிதி எம்.டி.சி. அ.ஆனந்தன் ஏற்பாட்டிலும், ஸ்டேஷன் ரோடு ஏரிக்கரை தெரு சந்திப்பு ஆட்டோ.சம்பத் ஏற்பாட்டிலும் போஸ்டல் காலனி ஆரிய கவுடா சாலை சந்திப்பில் இளைஞர் அணி ப.து.அமைப்பாளர் ஆர்.கே. ராஜ் ஏற்பாட்டிலும் தண்ணீர் பந்தலினை ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் திறந்து வைக்கின்றனர்.

எனவே நமது 134(அ) வட்ட இந்நாள் முன்னாள் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதி, பகுதி பிரதிநிதிகள், கழக அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், பாக குழு உறுப்பினர்கள்.கழக செயல் வீரர்கள் என அவைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமாய் வட்டச் செயலாளர் செந்தில்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !




